தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

Website: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.315/மா/2023

நாள் 29 .07.2025

திரு ஆர். மயில்சாமி
மதுரை
— முறையீட்டு மனுதாரர்

(1) செயற்பொறியாளர் (திட்டம்)
மதுரை மாநகராட்சி

(2) உரிமையாளர்,
ராசி மருத்துவமனை, மதுரை
— எதிர் மனுதாரர்கள்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர்.மயில்சாமி என்பவரின் 30.08.2023 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 31.08.2023 அன்று பெறப்பட்டு 315/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர்.மயில்சாமி தனது 30.08.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

> "மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண் 21 கொன்னவாயன் சாலை ஆலமரம் பஸ் நிறுத்தம் அருகில் கதவு எண்.54ல் இயங்கி வரும் "ராசி" மருத்துவமனை அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இம்மருத்துவமனை கட்டிடத்திற்கு அரசு விதிகளின்படி நான்கு பக்கமும் 13 அடி இடைவெளி இடம் விடாமல் (setback spaces) சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.
>
> மேலும் மேற்படி ராசி மருத்துவமனைக்கு வாகனம் நிறுத்துவதற்கு (Parking Spaces) இடம் விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் மருத்துவமனைக்கு வரும் உள்நோயாளிகள், புறநோயாளிகள் மற்றும் பார்வையாளர்களுடைய இரண்டு சக்கர வாகனம் மூன்று சக்கர வாகனம் மற்றும் கார்கள் நிறுத்துவதற்கு இடம் இல்லாததால் சாலை ஓரத்தில் நிறுத்துவதினால் வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதினால் இவ்வழியாக செல்லும் பள்ளி, கல்லூரி மாணவியர்கள் மற்றும் சிறியவர்கள் வரையிலும் இவ்வழியாக செல்ல மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். இம்மருத்துவமனைக்கு அருகில் புகழ் பெற்ற பாத்திமா பெண்கள் கல்லூரி உள்ளது. மேலும் கல்லூரி பேருந்து, பள்ளி பேருந்து, குடிநீர் வாகனம், ஆம்புலன்ஸ் மற்றும் பயணிகள் பேருந்துகளும் இவ்வழியாக செல்வற்கு மிகவும் சிரமப்பட்டு செல்ல வேண்டியுள்ளது.

ராசி மருத்துவமனை கட்டிடம் பொது மக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் 1973–ன் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 33–ன்படி அக்கட்டிடத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தின் (Directorate of Town and Country Planning) ஒப்புதல் பெறவில்லை மற்றும் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)–ன்படி வருவாய் துறையினரிடம் முறையான உரிமம் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வருகிறது.

எனவே மேற்படி ராசி மருத்துவமனை கட்டிடத்திற்கு setback space விடாமலும், வாகனம் நிறுத்துவதற்கு இடம் விடாமலும் அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடம் கட்டியும் உரிய அரசு துறைகளிடம் அனுமதி பெறாமலும், சட்டத்திற்கு புறம்பாக செயல்படும் மருத்துவமனையை தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் பிரிவுகள் 56 (1) மற்றும் 57–ன் உடன் படிக்கப்பட்ட பிரிவு 85–ன் கீழ் Stop work notice / notice calling for approval plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கபட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and Seal and demolition வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகவும் பணிவன்புடனும் தாழ்மையுடனும் வேண்டிக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 25.10.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

4.மதுரைமாநகராட்சி நகர திட்டமிடுநர் 10.06.2025 நாளிட்ட அறிக்கை எண்.மதி/ஈ4/9850/2023–ல் அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"மனுதாரரது 09.08.2023–ந் தேதிய புகார் மனுவில் மதுரை மாநகராட்சி மண்டலம் 2க்குட்பட்ட வார்டு எண் 21 கொன்னவாயன்சாலை, ஆலமரம் பஸ் நிறுத்தம் அருகில் கதவு எண் 54–ல் இயங்கி வரும் ராசி மருத்துவமனை கட்டிடம் அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்படி மனு மண்டலம் 2ஐ சார்ந்ததால் மனுதாரர் புகார் மீது நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்து மண்டலம் 2 உதவி ஆணையர் அவர்களுக்கு 16.08.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. மீண்டும் 13.10.2023 அன்று நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டது.

ஆனால் தற்சமயம் வரை உதவி ஆணையாளர், மண்டலம் 2 அவர்களிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படாத காரணத்தினால் மீண்டும் 10.06.2025 அன்று மேற்படி கட்டிடத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை முறைமன்ற நடுவம் அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் உடன் அறிக்கை அனுப்பி வைக்குமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தினை உதவி ஆணையாளரிடமிருந்து விரைவில் பெற்று அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது..'' என தெரிவித்துள்ளார்.

5. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவத்தில் 17.6.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 17.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மதுரை மாநகராட்சி மண்டலம் 2(வடக்கு) வார்டு 21, கொன்னவாயன் சாலை கதவு எண் 54ல் இயங்கி வரும் ராசி மருத்துவ மனை அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டும், நான்கு பக்கமும் 13 அடி இடைவெளி இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி ராசி மருத்துவமனைக்கு வாகனம் நிறுத்துவதற்கு இடம் விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், மருத்துவமனைக்கு வரும் உள்நோயாளிகன், புறநோயாளிகள் மற்றும் பார்வையாளர்களுடைய இரண்டு மற்றும் மூன்று சக்கரவாகனம் மற்றும் கார்கள் நிறுத்துவதற்கு இடம் இல்லாததால் சாலை ஓரத்தில் நிறுவத்துவதினால், வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இவ்வழியாக செல்லும் பள்ளி, கல்லூரி மாணவியர்கள், மற்றும் சிறியவர்கள் வரையிலும், இவ்வழியாக செல்ல மிகவும், சிரமப்பட்டு வருகிறார்கள். இம்மருத்துவமனைக்கு அருகில் புகழ் பெற்ற பாத்திமா பெண்கள் கல்லூரி உள்ளது. அதனால் கல்லூரி பேருந்து, பள்ளி பேருந்து குடிநீர் வாகனம் ஆம்புலன்ஸ் மற்றும் பயணிகள் பேருந்துகளும் இவ்வழியாக செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டு செல்ல வேண்டியுள்ளது.

ராசி மருத்துவமனை கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் 1973 ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 33ன்படி இக்கட்டிடத்திற்கு ஒப்புதல் பெறப்படவில்லை. மேலும் தமிழ்நாடு பொதுகட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)ன்படி வருவாய் துறையினரிடம் முறையான உரிமம் பெறப்படவில்லை.

எனவே சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட மேற்படி ராசி மருத்துவமனை கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்புசட்டம் 1971ன்படி தாக்கீதுகள் வழங்கி, விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்”.

7. மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் நகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை பொறியாளர் 17.06.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் வார்டு 21 கொன்னவாயன் சாலை, கதவு எண் 54ல் இயங்கும் ராசி மருத்துவ மனை ஆய்வு செய்யப்பட்டது. இடத்தின் உரிமையாளர் டாக்டர் சுவாமி என்பவர் மதுரை மாநகராட்சியில் 25.01.2022ல் கட்டிட வரைபட அனுமதி பெற்றுள்ளார். கட்டிட வரைபடத்தில் வாகன நிறுத்துமிடம் Basement Floor–ல் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் Basement Floor தற்போது வாகன நிறுத்துமிடமாக பயன்பாட்டில் இல்லை என்பதும் நான்கு பக்கமும் இடைவெளி இல்லாமல் இருப்பதும் நேராய்வில் கண்டறியப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மேற்கண்ட மருத்துவ மனை கட்டிடத்தின் உரிமையாளருக்கு Tamil Nadu Country Planning Rules, 2022 under Sec.56 or 57 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act, 35 of 1972)–ன்படி ஆவணங்கள் சமர்ப்பிக்கும்படி 13.06.2025 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. உரிமையாளரிடமிருந்து ஆவணங்கள் காலஅவகாசத்திற்குள் பெறப்படவில்லை எனில் சட்டப்பூர்வமான மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துகொள்கிறேன்.

8.மற்றொரு எதிர்மனுதாரரான இராசி மருத்துவமனை உரிமையாளர் திரு.S.சுவாமி என்பவர் 17.06.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

எனது ராசி மருத்துவ மனைக்கு 2001–2002ல் முறைப்படி மாநகராட்சியால் அனுமதி பெற்றும் மற்றும் கட்டிட அனுமதி எண்.37/2002 பெறப்பட்டுள்ளது. எனவே அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளது என்பது முற்றிலும் பொய்யானது.

எனது மருத்துவ மனை 5 உள் நோயாளிகள் படுக்கை அறையைக் கொண்ட சிறிய மருத்துவ மனையாகும். எங்கள் மருத்துவ மனைக்கு வரும் நோயாளிகள் மருத்துவமனை அருகில் வசிப்பவர்களே வருகிறார்கள். எனது மருத்துவ மனைக்கும் ரோட்டிற்கும் சுமார் 20 அடி தூரம் காலியான இடமாக உள்ளது. எனவே ரோட்டினை மறைத்து போக்குவரத்து இடையூறு செய்யும் வகையில் வாகனம் நிறுத்தும் சூழ்நிலை இல்லை. எனவே மனுதாரர் கூறியது முற்றிலும் பொய்யானது. உண்மைக்கு புறம்பானது.

மனுதாரர் தன்னை சமூக ஆர்வலர் எனக் கூறிக்கொண்டு இதுபோன்ற தவறான புகார்களை கூறி மற்றவர்களை மனஉளைச்சலுக்கு ஆளாக்கி அவர்களிடம் ஆதாயம் தேடும் தொழில் ஆக செய்து வருபவர் என்று இப்பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தை முறைப்படுத்த 2001–2002ல் அரசுக் கொண்டு வந்த கட்டிடங்கள் முறைப்படுத்தலின் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்து அனுமதிக்கு கூடுதலாக பகுதியை வரன் முறைப்படுத்த ரூ.13,000/– முன் பணமாக கட்டியுள்ளேன். அரசு அனுமதி பெற்ற பின் மீதமுள்ள தொகையை கட்ட தயாராக உள்ளேன். மேலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் கூறும் ஆலோசனை ஏற்று கட்டிடத்தை வரன் முறைப்படுத்த தயாராக இருக்கிறேன்.

மதுரை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரியை 2001–2002 முதல் வணிக வரியாக முறையாக செலுத்தி வருகிறேன்.

இத்துடன் புகைப்பட நகல், சொத்து வரி நகல், வரைப்பட நகல் ஆகியவற்றை இம்முறை மன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கின்றேன். மேலும் எனது எழுத்து பூர்வமான 17.06.2025 நாளிட்ட மனுவினை எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளும்படி இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''.

9. மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம், மதுரை மாநகராட்சியின் நகர் திட்டமிடுநரின் அறிக்கை மற்றும் மண்டலம் 2ன் நகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் மற்றொரு எதிர்மனுதாரரான, ராசி மருத்துவமனையின் உரிமையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர், மதுரை மாநகராட்சி மண்டலம் 2(வடக்கு), வார்டு 21, கொன்னவாயன் சாலை கதவு எண் 54ல் இயங்கி வரும் ராசி மருத்துவமனை அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடமும், நான்கு பக்கமும் 13 அடி இடைவெளி இடம் விடாமலும், வாகனம் நிறுத்துவதற்கு இடம் விடாமலும், கட்டிடம் கட்டப்பட்டுள்ளது எனவும், மருத்துவமனைக்கு வரும் உள்நோயாளிகள், புறநோயாளிகள் மற்றும் பார்வையாளர்களுடைய வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் இல்லாததால் சாலை ஓரத்தில் நிறுத்துவதினால், வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும், கல்லூரி பேருந்து, பள்ளி பேருந்து, குடிநீர் வாகனம், ஆம்புலன்ஸ் மற்றும் பயணிகள் பேருந்துகள் ஆகியவை செல்வதற்கு மிகவும் சிரமப்படுவதாகவும், ராசி மருத்துவமனை கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் 1973 ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 33ன்படி இக்கட்டிடத்திற்கு ஒப்புதல் பெறப்படவில்லை எனவும், தமிழ்நாடு பொதுகட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)ன்படி வருவாய் துறையினரிடம் முறையான உரிமம் பெறப்படவில்லை, எனவும், எனவே கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட, மேற்படி ராசி

மருத்துவமனை கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971ன்படி தாக்கீதுகள் வழங்கி, விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது அறிய முடிகிறது.

தனது மருத்துவ மனைக்கு 2001–2002ல் முறைப்படி மாநகராட்சியால் கட்டிட அனுமதி எண்.37/2002 அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளது என்றும், இம்மருத்துவமனையில் 5 (ஐந்து) உள் நோயாளிகள் படுக்கை அறையைக் கொண்ட சிறிய மருத்துவமனை எனவும், தனது மருத்துவமனைக்கும் ரோட்டிற்கும் சுமார் 20 அடி தூரம் காலியான இடமாக உள்ளதால், ரோட்டினை மறைத்து போக்குவரத்து இடையூறு செய்யும் வகையில் வாகனம் நிறுத்தும் சூழ்நிலை இல்லை எனவும், எனவே மனுதாரர் கூறியது முற்றிலும் பொய்யானது மற்றும் உண்மைக்கு புறம்பானது எனவும், மனுதாரர் தன்னை சமூக ஆர்வலர் எனக் கூறிக்கொண்டு இதுபோன்ற தவறான புகார்களை கூறி மற்றவர்களை மனஉளைச்சலுக்கு ஆளாக்கி அவர்களிடம் ஆதாயம் தேடும் தொழில் ஆக செய்து வருபவர் என்று இப்பகுதி மக்கள் கூறுகிறார்கள் எனவும், மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தை முறைப்படுத்த தயாராக உள்ளதாகவும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் கூறும் ஆலோசனை ஏற்று கட்டிடத்தை வரன் முறைப்படுத்த தயாராக இருப்பதாகவும், மதுரை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரியை 2001–2002 முதல் வணிக வரியாக முறையாக செலுத்தி வருவதாகவும், மற்றொரு எதிர்மனுதாரரான ராசி மருத்துவமனை உரிமையாளரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் வார்டு 21, கொன்னவாயன் சாலை, கதவு எண் 54ல் இயங்கும் ராசி மருத்துவ மனை ஆய்வு செய்யப்பட்டு, இடத்தின் உரிமையாளர் டாக்டர் சுவாமி என்பவர் மதுரை மாநகராட்சியில் 25.01.2022ல் கட்டிட வரைபட அனுமதி பெற்றுள்ளார் எனவும், கட்டிட வரைபடத்தில் வாகன நிறுத்துமிடம் Basement Floor–ல் காட்டப்பட்டுள்ளது எனவும், ஆனால் Basement Floor தற்போது வாகன நிறுத்துமிடமாக பயன்பாட்டில் இல்லை என்பதும் நான்கு பக்கமும் இடைவெளி இல்லாமல் இருப்பதும் நேராய்வில் கண்டறியப்பட்டு, மேற்கண்ட மருத்துவ மனை கட்டிடத்தின் உரிமையாளருக்கு Tamil Nadu Country Planning Rules, 2022 under Sec.56 or 57 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act, 35 of 1972) இன்படி ஆவணங்கள் சமர்ப்பிக்கும்படி 13.06.2025 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டுள்ளது எனவும், உரிமையாளரிடமிருந்து ஆவணங்கள் காலஅவகாசத்திற்குள் பெறப்படவில்லை எனில் சட்டப்பூர்வமான மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநரின் அறிக்கை மற்றும் மண்டலம் 2–ன் நகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் வார்டு 21, கொன்னவாயன் சாலை, கதவு எண் 54ல் இயங்கும் ராசி மருத்துவமனையினை மதுரை மாநகராட்சியால் ஆய்வு செய்யப்பட்டதில், இடத்தின் உரிமையாளர் டாக்டர் S.சுவாமி என்பவர் மதுரை மாநகராட்சியில் 25.01.2022ல் கட்டிட வரைபட அனுமதி பெற்று, கட்டிட வரைபடத்தில் வாகன நிறுத்துமிடம் Basement Floor–ல் காட்டப்பட்டுள்ளது என்பதும், ஆனால் Basement Floor தற்போது வாகன நிறுத்துமிடமாக பயன்பாட்டில் இல்லை என்பதும் நான்கு பக்கமும் இடைவெளி இல்லாமல் இருப்பதும் நேராய்வில் கண்டறியப்பட்டு, மருத்துவமனை கட்டிடத்தின் உரிமையாளருக்கு தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளது எனவும், உரிமையாளரிடமிருந்து ஆவணங்கள் காலஅவகாசத்திற்குள் பெறப்படவில்லை எனில் சட்டப்பூர்வமான மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தாலும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்படி விதி 35(23)–ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள இணைப்பு–IX-ல் வகுக்கப்பட்டுள்ள மருத்துவமனைக்கான சிறப்பு விதிமுறைகளின்படியும், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971–ன்படியும்,

அனுமதியில்லாமல் கட்டப்படும் கட்டிடங்கள் குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்த வழிகாட்டுதலின்படி, உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களுக்கு உத்தரவிடுமாறு, மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R.மயில்சாமி,
பிளாட் 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை–625 018.

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை–625 002.

3) நகர திட்டமிடுநர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை–625 002.

4) டாக்டர் S.சுவாமி,
உரிமையாளர்,
ராசி மருத்துவமனை,
கதவு எண் 54, கே. சாலை,
ஆலமரம் பஸ் ஸ்டாப்,
மதுரை–625 018.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

6) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

31/7/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

வாய்மையே வெல்லும்